20.02.2024, OS.NO.284/2021, P.W.1 – அகமது மீரா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் படிக்கவில்லை. பிராதில் என்ன எழுதபட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் கேட்டால் சொல்லுவேன். நிருபண வாக்குமூலத்தில் என்ன எழுதபட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. 04.07.1961ம்தேதி என் அப்பா இரண்டு இலக்க சொத்துக்களை மட்டும் கிரையம் வாங்கினார் என்றால் வாங்கியிருப்பார். அது என்னென்ன சொத்துக்கள் என்று எனக்கு தெரியாது. அதன் கதவு எண்.62. மேலத்தெருவில் உள்ளது. அந்த சொத்திற்கு மாநகராட்சியில் யார் பெயரில் வரி பதிவு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதற்கு யார் வரி செலுத்தினார்கள் என்றால் வைத்திருப்பவர்கள் செலுத்தியிருப்பார்கள். நான் சொத்துக்களுக்கு வரி செலுத்தவில்லை. 28.01.2008ம்தேதி என் அப்பா இறந்தபின்னர் என் அப்பா சொத்தை விட்டு சென்றிருந்தால் இஸ்லாமி சட்டப்படி எனக்கு பங்கு வரும் என்றால் சரிதான். என் அப்பா இறந்தபோது சொத்துக்களை மிச்சம் வைத்து விட்டு சென்றார். என் அப்பா விட்டுபோன சொத்துக்கள் என்ன என்றால் பைபாஸ் ரோட்டில் வயல் உள்ளது, முன்னீர்பள்ளத்தில் வயல் உள்ளது, குலவணிகர்புரத்தில் வயல் உள்ளது, மற்றோரு வயல் குத்தகைக்கு விடபட்டதாகும். மேலதெருவில் ஒரு வீடு உள்ளது. அதற்கு எதிரில் இரண்டு வீடுகள் உள்ளது. சாயன் தெருவில் ஒரு வீடு. அசந்தகரன் தெருவில் ஒரு வீடு உள்ளது. இரண்டு கடைகள் உள்ளது. ஓடை தெருவில் வடக்கு தைக்கை தெருவில் ஒரு மனை மற்றும் தெற்கு தைக்கை தெருவில் ஒரு மனை மற்றும் எதிரில் ஒரு மனை உண்டு. மேற்படி சொத்துக்களை என் அப்பா இறக்கும்போது விட்டு சென்றார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அவர் இறக்கும்போது மேற்படி சொத்துக்களை விட்டு விட்டு செல்லவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும் வரை எனக்கும், என் அப்பாவிற்கும் எந்த மனஸ்தாபமும் இல்லை. என் அப்பா இறப்பதற்கு முன்பு நான் அவரிடம் சென்று சொத்துக்களை கேட்கவில்லை. 2ம் பிரதிவாதி அவருக்கு கிடைத்த சொத்தில் பிளான் அப்ரூவல் வாங்கி வீடு கட்டினார் என்றால் என் அப்பா பணத்தில் கட்டினார். மற்ற சகோதரர்கள் அதே போன்று சொத்தை அபிவிருத்தி செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பழைய வீடாக வைத்துள்ளார்கள். அவர் அவர்களுக்கு கிடைத்த

சொத்துக்களுக்கு அவர்கள் பெயருக்கு அவர் அவர்கள் தீர்வை செலுத்தி வருகிறார்கள் என்றால் இருக்கலாம். 2ம் பிரதிவாதியான என் அண்ணனிடம் எப்படி அபிவிருத்தி செய்து கட்டினீர்கள், சொத்து எப்படி கிடைத்தது என்று கேட்டேனா என்றால் இல்லை. அது என் அப்பா பணமாகும். மற்ற சகோதரர்களிடம் சொத்து எப்படி கிடைத்தது என்று கேட்டேனா என்றால் இல்லை. எப்படி கேட்கமுடியும். என் அப்பா இறந்தபின்னர் யாரிடம் சொத்தை கேட்டேன் என்றால் 2ம் பிரதிவாதியிடம் கேட்டேன். அதற்கு அவர் தம்பிகளிடம் கேட்கவேண்டும் என்று சொன்னார். தம்பிகளிடம் கேட்டு என்ன பதில் சொன்னார் என்றால் தருகிறேன், தருகிறேன் என்று சொன்னார். பின்னர் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். அண்ணனிடம் கேட்டது எப்போது என்றால் என் அப்பா இறந்தபின்னர் கேட்டேன். தேதி ஞாபகமில்லை. 2021ல் கேட்டேன். 23.12.2005 ம்தேதி என் அப்பா சொத்துக்களை என் சகோதரர்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்திருந்தார் என்றால் அப்போது என் அப்பா சுயநினைவு இல்லாமல் இருந்தார். தூக்கிட்டு போய் கைரேகை வைத்துள்ளார்கள். அவருக்கு என்ன நோய் என்றால் படுத்தபடுக்கையாக இருந்தார். என்ன நோய் என்று தெரியாது. எந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்றார் என்றால் தெரியாது. 2002ல் வேலூர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு காண்பித்தார்கள். அவர்கள் சிகிச்சை செய்ய இயலாது என்று சொன்னார்கள். 2002ல் அவர் வேலூர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றது குறித்து மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2005ம் ஆண்டில் என் அப்பா பதிவாளர் அலுவலகம் சென்று வா.சாஆ.5 ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சுயநினைவு இல்லாமல் தூக்கி சென்று கைரேகை வாங்கியுள்ளார்கள். அந்த சமயத்தில் என் அப்பா சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் இல்லை. அப்போது நான் ஊரில் இல்லை. சொன்னார்கள். என் அப்பா சுயநினைவு இல்லாமல் இருப்பதாக நானோ, 7, 8 பிரதிவாதிகளோ பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை எதுவும் கொடுக்கவில்லை. சுயநினைவு இல்லாமல் ஆவணம் எழுதி வாங்கியது தவறு என்று என் சகோதரர்களுக்கு நான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பவில்லை. நேரில் தான் கேட்டேன். அதை என் அப்பா இறந்தபின்னர் போய் கேட்டேன். 2005ல் இருந்து 2008 வரை செட்டில்மெண்ட் ஆவணம் சம்பந்தமாக நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மாநகராட்சிக்கு என் சகோதரர்கள் பெயரில் பெயர் மாற்றம்

செய்யக்கூடாது என்று ஆட்சேபனை எதுவும் அனுப்பவில்லை. என் அப்பா இறந்தபின்னர் முதன் முதலில் 2021ல் தான் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தேன். 2021ல் சொத்தை எழுதி வாங்கியுள்ளார்கள். யார் எழுதி வாங்கினார்கள் என்றால் அவர்களுக்குள் எழுதி வாங்கினார்கள். அது எந்த சொத்து சம்பந்தபட்டது என்றால் எல்லா சொத்தும் சம்பந்தபட்டதாகும். அந்த சொத்து ஆவணங்களை பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்து பார்த்தேனா என்றால் வில்லங்கம் போட்டு பார்த்தேன். 28.01.2008ம்தேதி என் அப்பா 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் செட்டில்மெண்ட் பத்திரம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பத்திர நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பத்திர நகல் என் கைவசம் உள்ளதா என்றால் தெரியவில்லை. 28.01.2008ம்தேதி என் அப்பா இறந்த அன்று என் சகோதரர்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 வில்லங்க சான்றை சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றேனா என்றால் என் கணவர் தான் சொல்லி வில்லங்கம் போட்டு பார்த்தார். வா.சா.ஆ.13 ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றதாக விபரம் எதுவும் துலங்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 வில்லங்க சான்று வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் என் கைவசம் இருந்தது. அதை பிராதோடு சேர்ந்து தாக்கல் செய்வதற்கு காரணம் எதுவும் இல்லை. வா.சா.ஆ.13 ஆவணம் ஆன்லைன் மூலம் பெறப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.13 ஆவணம் ஒரு கம்பியூட்டர் சென்டரில் எங்களுக்கு சவுகரியமான ஒரு தேதியை போட்டு வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 வில்லங்க சான்றிதழில் வரிசை எண் 1வது இலக்க எண்ணின் சொத்தும், அதன்பிறகு 5, 6 இலக்க எண் சொத்துக்களை பொறுத்து உள்ளது என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் அவர்கள் தாயார் 1வது பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த சொத்து விபரங்களும் கம்பியூட்டர் சென்டரில் நாங்கள் சொன்னதின் அடிப்படையில் வா.சா.ஆ.13ல் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பாவிடம் சென்று பிள்ளைகளுக்கு சொத்து எழுதி வைக்கிறீர்கள், எனக்கு கொடுக்கவில்லை என்று நான் கேட்கவில்லை. என் அப்பா சொத்துக்கள் பற்றி எழுதி வைத்த விபரம் 17.01.2021ம்தேதி தான் முதலில் தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர்கள் பெயருக்கு எழுதி வைத்த ஆவணங்களுக்கு என்

அப்பா பெயரில் பத்திர காகிதங்கள் வாங்கபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் இன்னார் என்று நிருபித்த விபரத்தில் முகமது மைதீன், அகமது ஹக்கீம் ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதில் ஒருவர் இறந்துவிட்டார். சார்பதிவாளர் அலுவலகத்தில் அகமது மீரான், செயது முகைதீன் ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். என் அப்பா கைநடுக்கம் இருப்பதால் கைரேகை வைப்பதாக செட்டில்மெண்ட் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவருக்கு சுயநினைவு இல்லை. வழக்கிற்காக சுயநினைவு இல்லாத என் அப்பாவிடம் ரேகை வாங்கபட்டது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுயநினைவு இல்லாத நிலையில் சார்பதிவாளர்அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யமாட்டார்கள் என்றால் சரியல்ல. என் சகோதரர்கள் மீதுள்ள அன்பினாலும், விசுவாசத்தினாலும் என் அப்பா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. இஸ்லாமிய சட்டப்படி 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சொத்துக்களை எழுதி வைக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் என் அப்பா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றும், எழுதி வைத்த அன்றே சொத்துக்களை என் சகோதரர்கள் அனுபவம் எடுத்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. அந்த அனுபவத்தின் அடிப்படையில் மாநகராட்சியிலும்,வருவாய் துறையிலும் சொத்துக்கள் அவர் அவர்கள் பெயர்களுக்கு பெயர் மாற்றம் செய்யபட்டுள்ளது என்றும், செட்டில்மெண்ட் ஆவணத்தின்பேரில் இன்றைய தேதி வரை 2 முதல் 6 பிரதிவாதிகள் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தை செல்லாது என்று பிராதில் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 2005 ம் ஆண்டில் என் அப்பாவிற்கு வயது 81 என்பதை காட்டுவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 2005 ம் ஆண்டில் என் அப்பா என்னுடன் வசிக்கவில்லை என்றால் சரிதான். பூர்விக வீட்டில் இருந்தார். அதன் கதவு எண்.62. செட்டில்மெண்ட் ஆவண படி அந்த சொத்து யாருக்கு ஒதுக்கபட்டுள்ளது என்றால் அது எல்லோருக்கும் உரிய சொத்தாகும். என் அப்பாவுடன் பதிவாளர் அலுவலகத்திற்கு உழவன் சென்றார். அவர் தான் என் அப்பாவின் ரேகையை பிரட்டினார். அவர் பெயர் என்ன என்றால் மறந்துவிட்டது. அவர் தான் என் அப்பாவை கவனித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் இல்லை. பிராது 10 பத்தியில் என் அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாமல்

இருந்ததாகவும், சுயநினைவு இல்லாமல் இருந்ததாகவும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும் காலத்தில் சுயநினைவோடு, நல்ல திடகார்த்ததோடு இருந்தார் என்றால் சரியல்ல. அவர் 4 ஆண்டுகள் சுயநினைவு இல்லாமல் இருந்தார். 2021ம் ஆண்டில் இருந்து சுயநினைவு இல்லாமல் இருந்தார்.

பிரதிவாதிகள் தரப்பில் கேட்டு கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.